**1990**

ශ්‍රී ලංකා හදිසි වෛද්‍ය සේවය
இலங்கை அவசர மருத்துவ சேவை
Sri Lanka Emergency Medical Service




# இலங்கை முன் மருத்துவமனை பராமரிப்பு சேவையின் பெருமைமிக்க பிரதிநிதியாகுங்கள்!

"1990 இலங்கை அவசர மருத்துவ சேவை" என்பது இலங்கையின், முன்னோடியான முன்-மருத்துவமனை அவசர பராமரிப்பு ஆம்புலன்ஸ் சேவையாகும. இது சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. "1990 இலங்கை அவசர மருத்துவ சேவை" நாடு முழுவதும் 322 ஆம்புலன்ஸ்களுடன் உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

1990 இலங்கை அவசர மருத்துவ சேவையின் நிர்வாக சபை, உயிர் காக்கும், முன்-மருத்துவமனை அவசர பராமரிப்பு ஆம்புலன்ஸ் சேவைகளை வழங்கி வரும் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி (Chief Executive Officer) பதவிக்காக, தகுதியான, அனுபவமுள்ள மற்றும் திறமையான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

## பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO)

### முக்கிய பொறுப்புக்கள்

- மன்றத்தின் அனைத்து அம்சங்களிலும் மூலோபாய தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் வழங்குதல்.
- செயல்பாட்டு சிறப்பு, சேவை வழங்கல் மற்றும் நிறுவன வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திடக்கட்டமைப்புகளை வடிவமைத்து செயல்படுத்துதல்.
- நேர்மறையான பணித்தள கலாச்சாரத்தை உருவாக்குதல் உயர் மட்ட ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் செயல்திறனை உறுதி செய்தல்.
- நிர்வாக சபை, அரசாங்க பங்குதாரர்கள், கூட்டாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பை பேணுதல்.
- விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் நிதி நிலைத்தன்மைக்கு இணங்க செயற்படுதல், நிதி மற்றும் நிதியல்லா அறிக்கைகளை பரிசீலித்து மேம்பாட்டை முன்னெடுத்தல்.
- தேசிய / பன்னாட்டு மாநாடுகள் மற்றும் பொதுக் கூட்டங்களில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் புதுமைகளைப் பயன்படுத்தி நிறுவனத்தின் செயற்பாட்டு திறன், தரவுத்தள அடிப்படையிலான முடிவெடுப்பு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துதல்.

### தேவையான கல்வித் தகுதி மற்றும் அனுபவம்

- நிர்வாகம், முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், நிதி அல்லது அவசர மருத்துவ சேவைகள் ஆகிய துறைகளில் ஒரு அடிப்படைப் பட்டமும், அதனுடன் முதுகலை பட்டமும் பெற்றிருக்க வேண்டும். மேலும் குறைந்தது 1,000 பணியாளர்களை பணியமர்த்தும் நிறுவனத்தில் 12 ஆண்டுகள் முகாமைத்துவ அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

- நிர்வாகம், முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், நிதி அல்லது அவசர மருத்துவ சேவைகள் ஆகிய துறைகளில் ஒரு அடிப்படைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும் குறைந்தபட்சம் 1,000 பணியாளர்களை பணியமர்த்தும் நிறுவனம் ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் முகாமைத்துவ அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

*மேலும், விண்ணப்பதாரர்கள் பின்வரும் திறன்களையும் நிரூபிக்க வேண்டும்:*

- பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO), பிரதான செயல்பாட்டு அதிகாரி (COO) அல்லது இதற்கு இணையான மூலோபாய மேலாண்மை பதவிகளில் பணியாற்றிய அனுபவத்துடன், செயல்பாடுகள், மூலோபாய திட்டமிடல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் வலுவான திறன்களை கொண்ட, நிரூபிக்கப்பட்ட மூத்த தலைமையாண்மை அனுபவம்.
- சிறந்த தொடர்பு, முடிவெடுப்பு மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்கள் பல்துறை அணிகளை வழிநடத்தி, பல பங்குதாரர்களுடன் பயனுள்ள ஒத்துழைப்பை மேற்கொள்ளும் திறன்.
- அவசர சேவை, சுகாதாரப் பராமரிப்பு அல்லது பொதுத்துறையில் முன் அனுபவம் ஒரு தனித்துவமான நன்மையாகக் கருதப்படும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை **careers@1990.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். மின்னஞ்சல் மூலம் அனுப்பும் பட்சத்தில் பொருள் வரியில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட வேண்டும். பதிவுத்தபால் மூலம் அனுப்பும் பட்சத்தில், உறையின் மேல் மத்திய பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் 2025 அக்டோபர் மாதம் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1990 சுவ செரிய மன்றம், இல. 415, கோட்டை வீதி, இராஜகிரிய.